# கம்பம் நகராட்சி

**2025-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 .12.2025-ஆம் நாள் திங்கட்கிழமை பிற்பகல் 03.30 மணிக்கு கம்பம் நகர்மன்றக்கூட்ட அரங்கில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**

கூட்டப்பொருள்

| | |
|---|---|
| 1 | நகராட்சி ஆணையர் அவர்களின் 07/2025- முதல் 10/2025 வரை உள்ள மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு: பதிவு செய்யலாம். |
| | **தீர்மான எண்683 அனுமதிக்கப்பட்டது** |
| 2 | நகராட்சி பொறியாளர் அவர்களின் 07/2025- முதல் 10/2025 வரை உள்ள மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு: பதிவு செய்யலாம். |
| | **தீர்மான எண்684 அனுமதிக்கப்பட்டது** |
| 3 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.26987/2025/எச்3, நாள்.20.09.2025-இன்படி மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ஆய்வுக்கூட்ட நாள்.06.11.2025 அறிவுரைகளின்படியும், கம்பம் நகராட்சியில் பணிபுரியும் நிரந்தர மற்றும் தற்காலிக தூய்மை பணியாளர்கள் 265 நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தூய்மை பணியாளர்களுக்கான காலை உணவுத்திட்டத்தில் உணவு வழங்க அறிவுறுத்தப்பட்டது.<br>அதனடிப்படையில் அரசாணை (4ப) எண்.56, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை நாள்.21.11.2025 மற்றும் சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.கஎண்.29143/2025/எச்3, நாள்.22.11.2025-ஆம் தேதிய அரசாணை மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இந்நகராட்சி நிரந்தர மற்றும் தனியார் தூய்மை பணியாளர்கள், DBC பணியாளர்கள், அனைத்து பள்ளிகளிலும் உள்ள கழிப்பறைகளை தூய்மை செய்யும் தூய்மை பணியாளர்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியில் ஈடுபடக்கூடிய ஓட்டுநர்களுக்கு தினந்தோறும் ஒரு வேளை உணவு வழங்குவதற்கான செலவினம் என ஒட்டுமொத்தமாக ஏற்படும் முதலாம் ஆண்டு செலவினத்துடன் 5% ஏற்றம் செய்து இரண்டாம் ஆண்டிலும், இரண்டாம் ஆண்டின் ஒட்டு மொத்த செலவினத்துடன் 5% ஏற்றம் செய்து மூன்றாம் ஆண்டிலும் செலவினம் மேற்கொள்ள நிர்ணயம் செய்யப்பட்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அதன்படி கம்பம் நகராட்சிக்கு 265 தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவுத்திட்டம் செயல்முறைப்படுத்த மூன்றாண்டுக்கான உணவு மற்றும் வாகனச் செலவு உட்பட செலவினத் தொகை ரூ. 1,40,75,582/- ஆகும்.<br>மேற்காணும் அரசாணையில் தெரிவித்துள்ளபடி, கம்பம் நகராட்சியில் பணிபுரியும் 265 தகுதி வாய்ந்த பணியாளர்களுக்கு காலை உணவுத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக இரண்டு டிபன்பாக்ஸ்கள்(தலா ரூ.295/-விலையில்) மற்றும் உணவு வழங்கும் பை (தலா ரூ.190/-விலையில்) வாங்குவதற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| வ.எண். | பொருட்கள் விவரம் | எண்ணிக்கை (ம) விலை விபரம் | மொத்த தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | இரண்டு டிபன்பாக்ஸ்கள் | (295x2x265) | 1,56,350/- |
| 2 | உணவு வழங்கும் பை | (190x2x265) | 1,00,700/- |
| | | மொத்தம் | 2,57,050/- |

| | |
|---|---|
| | மேற்காணும் பணி 265 பணியாளர்களுக்கு காலை உணவுத்திட்டத்தின் கீழ் உணவு வழங்கும் பணியை மேற்கொள்ள 26.11.2025-ஆம் தேதியன்று கீழ்காணும் விபரப்படி வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர்(ம) முகவரி | விலை விகிதம் ரூபாயில் (முதல் வருடத்திற்கு) |
|---|---|---|
| 1 | M/s Peoples Kitchen,<br>6-187-1D, Muthu nagar,<br>Vellalore ,<br>Coimbatore – 641 111 | Rs.42,55,416.38/-<br>(Including GST) |

| | அலுவலகக்குறிப்பு | |
|---|---|---|
| | | 1) மன்றம் பதிவு செய்யலாம். |
| | | 2)மேற்காணும் செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்வதை மன்றம் அனுமதிக்கலாம். |
| | | 3)மேற்காணும் ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்த M/s Peoples Kitchen, கோயம்புத்தூர் நிறுவனத்தினரை மன்றம் அனுமதிக்கலாம். |
| | தீர்மான எண்685 அனுமதிக்கப்பட்டது | |
| 4 | கம்பம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 60AV 9643 என்ற JCB வாகனத்திற்கான நான்கு டயர்கள் டியூப் உடன் வாங்கி பொருத்த விலைப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | |

| வ.எண் | பொருட்கள் விபரம் | ANUGRAHA TYRRES | JEYARAJ AUTOMOBILE AGENCY | SRI MURUGAN AUTO ELECTRICALS |
|---|---|---|---|---|
| 1. | நான்கு டயர்கள் டியூப் | ரூ.97700/- | ரூ.109618/- | ரூ.103700/- |

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு | குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ANUGRAHA TYRRES என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 721/2025/எச்1) |
| | தீர்மான எண்686 அனுமதிக்கப்பட்டது | |
| 5 | கம்பம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் கிருமிநாசினியாக உபயோகப்படுத்தப்படும் பிளீச்சிங்பவுடர், சுண்ணாம்புத்தூள் மற்றும் பினாயில் வாங்கி உபயோகப்படுத்த கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது | |

| வ.எண் | பொருட்கள் விபரம் | | SRI BALAJI MARKETING | SHREE THAI MOOKAMBIKA EXPORT |
|---|---|---|---|---|
| 1. | பிளீச்சிங்பவுடர் | ஒரு கிலோவிற்கு | ரூ.45/- | ரூ.40/- |
| 2. | சுண்ணாம்புத்தூள் | ஒரு கிலோவிற்கு | ரூ.15/- | ரூ.9/- |
| 3. | பினாயில் | ஒரு லிட்டருக்கு | ரூ.70/- | ரூ.65/- |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு | குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள SHREE THAI MOOKAMBIKA EXPORT என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 1301/2025/எச்1) |
| | தீர்மான எண்687 அனுமதிக்கப்பட்டது | |

| | |
|---|---|
| 6 | கம்பம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் MCCயில் கிருமிநாசினியாக உபயோகப்படுத்தப்படும் லெமன்கிராஸ் ஆயில் வாங்கி உபயோகப்படுத்த கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது |

| வ.எண் | பொருட்கள் விபரம் | அளவு | SRI BALAJI MARKETING | SHREE THAI MOOKAMBIKA EXPORT |
|---|---|---|---|---|
| 1. | லெமன்கிராஸ் ஆயில் Grade-I | ஒரு லிட்டருக்கு | ரூ.2650/- | ரூ.2540/- |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு | குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள SHREE THAI MOOKAMBIKA EXPORT என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 1300/2025/எச்1) |
| | தீர்மான எண்688 அனுமதிக்கப்பட்டது | |
| 7 | கம்பம் நகராட்சியில் பணிபுரியும் நிரந்தர தூய்மைப்பணியாளர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மழைகோட் (Rain coat) வாங்கி வழங்க வேண்டும் அதன்படி தற்போது பணிபுரியும் 37 நிரந்த தூய்மைப்பணியாளர்களுக்கு வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/-க்கு மன்றத்தின் அனுமதியும் அதனை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திலிருந்து வாங்கி வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது | |
| | அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதிக்கலாம். |
| | தீர்மான எண்689 அனுமதிக்கப்பட்டது | |
| 8 | கம்பம் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் தினமும் 26.71 டன் குப்பைகள் உருவாகிறது இதனை Ourland Engineering Works PVT Ltd என்ற நிறுவனம் சேகரித்து மக்கும் குப்பைகள் தினமும் சராசரியாக 10 டன்னும் மக்காத குப்பைகள் தினமும் சராசரியாக 6.71 டன்னும் விற்பனை செய்யக்கூடிய கழிவுகள் மற்றும் சாக்கடை கழிவுகள் தினமும் சராசரியாக 3டன்னும் எதுக்கும் உதவாத கலந்த கழிவுகள் (Mixed Waste ) தினமும் சராசரியாக 5 டன்னும் வழங்குகிறது. அதில் மக்கும் கழிவுகள் MCCயிலும் மக்காத கழிவுகள் RRCயிலும் விற்பனை செய்யக்கூடிய கழிவுகள் பணியாளர்கள் மூலம் விற்பனை செய்தும், சாக்கடை மண் போன்றவை பள்ளங்களில் நிரப்பியும் Mixed Waste குப்பைகள் உரக்கிடங்கிலும் சேகரிக்கப்பட்டு வருகிறது இந்நிலையில் கடந்த பிப்ரவரி 2025ம் மாதம் உரக்கிடங்கில் எதிர்பாராத விதமாக தீ விபத்து ஏற்பட்டதால் குப்பைகள் எரிந்து போன நிலையில் Mixed Waste குப்பைகளை கொட்ட வேறு எங்கும் நகராட்சி இடம் இல்லாததால் கொட்ட இயலாமல் தற்காலிக நடவடிக்கையாக உரக்கிடங்கிற்கு அருகில் உள்ள தனியாருக்கு சொந்தமான கேப்டன் திடல் என்னும் பகுதியில் உரக்கிடங்கினை ஒட்டி ஓரமாக கொட்டப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி இடத்தின் உரிமையாளர் தற்போது பலமுறை அக்குப்பைகளை அப்புறப்படுத்த கோரி வேண்டுகோள் விடுத்தும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது மேற்படி குப்பைகளை சிமெண்ட் பேக்டரிக்கு அனுப்பலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் அவசர அவசியம் கருதியும் அத்தியாவசியத்தினை முன்னிட்டும் அவ்விடத்தில் சேர்ந்துள்ள குப்பைகள் தோராயமாக 1350 டன்னினை தனியார் மூலம் சிமெண்ட் பேக்டரிக்கு அனுப்பி அவ்விடத்தினை சுத்தம் செய்து கொடுக்க முதல் கட்டமாக ரூ.9.00/- லட்சம் தொகை செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதியும் பொதுமக்களின் புகாரினை தொடர்ந்தும் மேற்படி பணியினை செய்ய தகுதி வாய்ந்த நபரிடமிருந்து விலைப்புள்ளி பெற்று குறைவான விலைப்புள்ளி வழங்கும் நபருக்கு வேலை உத்திரவு கொடுத்து பணியினை விரைந்து முடித்திடவும் இனி வரும் காலங்களிலும் Mixed Waste கொட்டுவதற்கு நகராட்சி இடம் கண்டுபிடித்து தரும் வரையிலும் இப்பணியை தொடரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது | |
| | அலுவலகக்குறிப்பு | மன்றம் அனுமதிக்கலாம். |
| | தீர்மான எண்690 அனுமதிக்கப்பட்டது | |

| | |
|---|---|
| 9 | கம்பம் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் கொசுப்புழுக்களையும் கொசுக்களையும் அழிக்க பயன்படுத்தப்படும் அபேட், பைரேத்திரம் மற்றும் BT பவுடர் போன்ற மருந்துகள் கீழ்கண்ட அளவில் உத்தேசமாக ரூ.4.00/- லட்சத்தில் வாங்கி உபயோகப்படுத்தவும் அதனை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்து பயன்படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அபேட் மருந்து - 50 லிட்டர்<br>பைரேத்திரம் மருந்து - 200 லிட்டர்<br>BT பவுடர் -100 லிட்டர் |
| | அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் |
| | தீர்மான எண் 691 அனுமதிக்கப்பட்டது |
| 10. | கம்பம் நகராட்சி பகுதியில் நீண்ட காலமாக நிலவி வந்த பொதுமக்களின் குடிநீர் பற்றாக்குறையை போக்க, நகராட்சிக்கென தனி கூடுதல் குடிநீர் திட்டம் சுருளிப்பட்டிரோடு முல்லையாற்றில் உறை கிணறு அமைத்து 23.09.2014முதல் நகர மக்களுக்கு குடிநீர் குறைவின்றி பம்பிங் செய் யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் திட்டத்தில் உள்ள 8 மின் விசை மோட்டார்களை உரிய தொழில் நுட்ப பணியாளர்களை கொண்டு இயக்குதல் பணிகளை செய்திட, தகுதியான பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரியதற்கிணங்க, இந்நகராட்சியின் மூலம் கடந்த 18.11.2021 அன்று கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும் வரை, குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாத வகையில், பணிகளை மேற்கொள்ள ஒப்பந்ததாரர் திரு எல்.ராஜேந்திரன் என்பருக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 615, நாள்.13.03.2025-ன் படி வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு ஒப்பந்த காலம் 30.09.2025-ல் முடிவடையும் நிலையில், தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.எல்.ராஜேந்திரன் என்பவருக்கு மேலும் 6- மாதகாலத்திற்கு (01.10.2025 முதல் 31.03.2026 வரை) பணி நீட்டிப்பு செய்தும், (மின் பணியாளர்-3, காவலர்-1 நபர்) இதற்கான உத்தேச மதிப்பீடு தொகை மற்றும் ESI.EPF.GST உட்பட தொகை ரூ. 4,65,000/- (ரூபாய் நான்கு இலட்சத்து அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது |
| | அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் நிதி 2025-2026-ஆம் ஆண்டின் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பணிகளை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | தீர்மான எண்692 அனுமதிக்கப்பட்டது |
| 11 | கம்பம் நகராட்சி வார்டு 1 முதல் 33 வரை உள்ள பொதுமக்களின் குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள், 2025-2026 முதல் அரையாண்டிற்கு மேற்கொள்ள, குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரருக்கு, 01.04.2025 முதல் 30.09.2025வரை, வேலைக்கான உத்திரவு மன்ற ஒப்புதலுடன் வழங்கி, பொதுமக்களுக்கான குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் 2025-2026 இரண்டாம் அரையாண்டிற்கு கீழ்குறிப்பிட்டுள்ள பணிகள் செய்திட உரிய நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ள, மன்ற ஒப்புதல் பெறுவதில் நகர்மன்றத்தில் இணக்கமான சூழ்நிலை இல்லாமல், அசாதாரண நிலையின் காரணமாக மன்ற கூட்டம் நடைபெறாமல், நிர்வாக ஒப்புதல் மற்றும் மதிப்பீட்டிற்கான அனுமதி பெற இயலவில்லை. ஆதலால் பொதுமக்களின் அத்தியாவசிய தேவையான குடிநீர் தொடர்பான கீழ்கண்ட பணிகள் 2025-2026 இரண்டாம் அரையாண்டிற்கு மேற்கொள்ள, ஏற்கனவே பணி உத்திரவு வழங்கி, பணி செய்து வந்த ஒப்பந்ததாரருக்கு அதே விலை விகித அடிப்படையில் 01.10.2025 முதல் 31.03.2026 முடிய பணி நீட்டிப்பு செய்யவும், உரிய மதிப்பீட்டிற்கும் மன்றம் ஒப்புதல் வேண்டப்படுகிறது. |

| | வ.எண். | 2025 – 2026 இரண்டாம் அரையாண்டிற்கு மேற்கொள்ள வேண்டிய குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் விபரம் | இரண்டாம் அரையாண்டிற்கு தோராய மதிப்பீட்டுத் தொகை. (ரூபாய் இலட்த்தில்) |
|---|---|---|---|
| | 1 | வார்டு 1 முதல் 33 முடிய உள்ள வார்டுகளில், குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் கசிவுகள், உடைப்புகள், வால்வுகளில் ஏற்படும் பழுதுகள் சரி செய்தல், | 9.80 |
| | 2 | வார்டு 1 முதல் 33 முடிய உள்ள வார்டுகளில், பொதுமக்களின் தண்ணீர் தேவைக்கு நிறுவப்பட்டுள்ள 238 சிறு மின் விசைபம்புகள் பராமரிப்பு பணிகள் செய்தல். | 9.75 |
| | 3 | கம்பம் நகராட்சி பொதுமக்களின் குடிநீர் தேவைக்கு லோயர்கேம்ப் மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையங்களில் நிறுவப்பட்டுள்ள மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்தல். | 3.40 |
| | 4 | லோயர்கேம்ப் மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையத்தில் குடிநீருடன் கேஸ்குளோரின் கலக்க தேவையான 10 சிலிண்டர்கள் வாங்குதல். | 3.25 |
| | 5 | லோயர்கேம்ப் மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையத்தில் குடிநீருடன் கேஸ்குளோரின் கலக்க பயன்படும் இயந்திர பராமரிப்பு பணி செய்தல். | 2.00 |
| | அலுவலகக்குறிப்பு | 1)பொதுமக்களின் அத்தியாவசிய தேவையான குடிநீர் தேவையை கருத்திற்கொண்டு மதிப்பீட்டிற்கும், கால நீட்டிப்பு செய்வதற்கும். மன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| | | 2) மேற்காணும் பணிக்கு ஆகும் செலவினத்தொகையினை குடிநீர் நிதி 2025- 2026ம் ஆண்டு நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | |
| | **தீர்மான எண்693 அனுமதிக்கப்பட்டது** | | |
| 12. | கம்பம் நகராட்சி லோயர்கேம்ப் குடிநீர் திட்டம் ரூ.18.80 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செயல்படுத்தி பணிகள் முடித்து நகராட்சி வசம் 17.04.2020 ம் தேதி முதல் ஒப்படைப்பு செய்யப்பட்டது. அதன்படிலோயர்கேம்ப்தலைமைநீரேற்றுநிலையத்தில் 150HP மோட்டார்ஒருஎண்ணம் 75HP மோட்டார்இரண்டுஎண்ணம்மொத்தம் 3 மின்மோட்டார்கள்மற்றும் Raw water, Fillter bed, Clear Water உள்ளவால்வுகளைஇயக்குவதற்கும்வார்டுஎண் 1 முதல் 33 வரையிலானபகுதியில்உள்ள 12 எண்ணம்மேல்நிலைநீர்த்தேக்கதொட்டிகள் (OHT) ஒருஎண்ணம்தரைகீழ்தொட்டி (GLR) மொத்தம் 13 எண்ணம்தொட்டிகளிலிருந்து D-Main மூலம்நகரின்அனைத்துவார்டுகளுக்கும்சீரானகுடிநீர்வழங்கநகராட்சி மூலம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால், வருடாந்திர ஒப்பந்த அடிப்படையில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் உரிய மன்ற அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறிப்பிட்டுள்ள திரு.எல்.ராஜேந்திரன் என்பவருக்கு இவ்வலுவலக ந.க.எண். 1136/2020/இ2 நாள்.01.12.2020 ம் தேதியிட்ட செயல் முறை ஆணையில் 01.12.2020 முதல் 30.11.2021 முடிய லோயர் கேம்ப் குடிநீர் திட்டத்தை இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட அனுமதித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.29156/2019/DO2/ நாள்.22.10.2020ம் தேதிய கடிதத்தில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் செய்திட ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் செயல்பாடுகளில் குறைபாடுகள் ஏதுமில்லாத நிலையில் தொடர்ந்து நீட்டித்து கொள்ளலாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் | | |

| | | |
|---|---|---|
| | கோரப்பட்டதற்கு இந்நகராட்சியின் மூலம் கடந்த 18.11.2021 அன்று கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும்வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாத வகையில், பணிகளை மேற்கொள்ள ஒப்பந்ததாரர் திரு.எல்.ராஜேந்திரன் என்பவருக்கு, இந்நகர்மன்ற தீர்மான எண். 678, நாள்.12.08.2025-ன் படி வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு ஒப்பந்த பணிக்காலம் 30.09.2025-ல் முடிவடையும் நிலையில், தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.எல்.ராஜேந்திரன் என்பவருக்கு மேலும் 3- மாதகாலத்திற்கு (01.10.2025 முதல் 31.12.2025 வரை) அனுமதி மற்றும் பணி நீட்டிப்பு செய்தும், (மின் பணியாளர்-3, படுகை வடிகட்டி இயக்குநர்-3, காவலர்-12 நபர்கள்) இதற்கான உத்தேச மதிப்பீடு தொகை மற்றும் ESI,EPF.GST உட்பட தொகை ரூ. 11,70,000/-க்கு (ரூபாய் பதினோறுஇலட்சத்துஎழுபதாயிரம்மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது | |
| | அலுவலகக்குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| | | 2) மேற்காணும் செலவினத்தை குடிநீர் நிதி 2025-2026-ஆம் ஆண்டின் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் |
| | | 3) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பணிகளை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | தீர்மான எண்694 அனுமதிக்கப்பட்டது | |

13

**சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள்(By-Law), 2018**

சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) 37வது பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015-ன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் கம்பம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றது.

மதுரை மாநகராட்சி சட்டம், 1971 அத்தியாயம் 15 பிரிவு 433 / கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம், 1981 அத்தியாயம் 15 பிரிவு 432 / தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 அத்தியாம் 14 பிரிவு 306 மற்றும் அதன் உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படியும், அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டும், மற்றும் சாலையோர விற்பனையினை ஒழுங்குப்படுத்தவும், மாநகராட்சி / நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 ஏற்படுத்தப்படுகின்றது

**அத்தியாயம்-1**

**முதனிலை**

1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.- இந்த துணை விதிகள் கம்பம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 என்றழைக்கப்படும்.
   இந்த துணை விதிகளானது வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்

2. பொருள் வரையறைகள்.- இந்த துணை விதிகளில், உபயோகப்படும் வார்த்தைகளுக்கான பொருள் வரையறை :

i) "சட்டம்" என்பது சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) என்று பொருள்படும்.

ii) "விற்பனை திட்டம்" என்பது சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட விற்பனை திட்ட வரைபடம் என்று பொருள்படும்.

iii) "விதிகள்" என்பது தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 என்று பொருள்படும்.

iv) "திட்டம்" என்பது சட்டத்தின் 38 வது பிரிவின் கீழ் கட்டமைக்கப்பட்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல், 2015 என்று பொருள்படும். "நகர விற்பனை குழு" என்பது விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நகர விற்பனைக் குழு என்று பொருள்படும்.

v) சட்டம் விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட வார்த்தைகளும் வெளிபாடுகளும் இந்த துணை விதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே சட்டம், விதிகள் அல்லது சட்டம் ஆகியவற்றில் கொண்டுள்ள அதே பொருள்படும்.

## அத்தியாயம்-2

## விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விதம் மற்றும் ஒழுங்கு முறைகள்

1. பாத சாரிகளின் நடமாட்டம் (Foot fall) மற்றும் சாலையின் அகலம், வாகனம் மற்றும் பாதசாரிகளுக்கான சீரான இயக்கம் ஆகியவற்றின் தன்மையை கருத்தில் கொண்டுவிற்பனை மண்டலங்களை நகர விற்பனை குழு முடிவு செய்யும்

2. ஒரு இடத்தின் கொள்திறனுக்கேற்ப சாலையோர வியாபாரிகளின், எண்ணிக்கை வரையறுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டவாறு நடமாடும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை வரம்பை மீறாமல் இருப்பது குறித்து கம்பம் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் சரிப்பார்க்கப்பட வேண்டும்.

3. சாலையின் அகலத்தை கொண்டும், சாலை விவரிப்பு குறித்தான கீழ்காணும் விவரங்களைக் கொண்டும் இத்திட்டத்தில் கட்டுப்டுத்தப்பட்ட விற்பனை மண்டலங்களை விவரிக்கப்பட வேண்டும்.

   i. இரு வழி போக்குவரத்து கொண்ட 6 மீட்டர் அகலம் கொண்ட சிறிய சாலைகளில், நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகளில் எந்தவித நேரத்திலும் வாகனங்கள் அனுமதிக்கப்படாத சாலையாக அறிவிக்கப்பட்டால், அச்சாலையில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

   ii. 3 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை அகலமான சிறிய சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகள் ஒரு வழி வாகன சாலை என அறிவிக்கப்பட்டிருந்தால், சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

   iii. 5 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை அகலமான சாலைகளில், சாலையின் ஒரு புறத்தில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

   iv. 10 மீட்டர் மற்றும் அதற்கு மேல் அகலமான பெரிய சாலைகளில், சாலையில் இரு புறமும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

   v. ஒரு சாலையில் விற்பனை அனுமதிக்கப்பட்ட இடத்தில் அதன் கொள்திறனுக்கேற்ப சாலையோர விற்பனையாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

   vi. சீரான போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் குறித்து காவல்துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் தான் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும் தேவைப்பட்டால், அந்த இடத்தில் வாகன நிறுத்தம் தடை செய்யப்பட வேண்டும்.

   vii. வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தான், சாலைகளில் நடமாடும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்.

   viii. சாலை வடிவமைப்பு குறித்தான அறிவுரைகள், இந்த துணை விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. சாலையோர விற்பனை தடைச் செய்யப்பட்ட மண்டலங்களில்,

   i. அரசு கட்டிடங்கள், உயர்நீதி மன்றம், பிற நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மாவட்ட ஊராட்சி / மாநகராட்சி / நகராட்சி அலுவலகங்கள், தீயணைப்பு நிலையங்கள் ஆகியவற்றின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 10 மீட்டர் நீளத்திற்கும்,

   ii. இரயில் நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

5. நகர எல்லைக்குட்பட்ட இரயில் கடவுப்பாதையின இரு பக்கங்களிலும் 30 மீட்டர் நீளத்திற்கும்,
6. பேருந்து நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,
7. பண்டைய நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல் பொருளியல் தளங்கள் மற்றும் அகழ்வுகள் சட்டம், 2010ன்கீழ் அறிவிக்கப்பட்ட இடங்களில் பாதுகாப்பு கருதி சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.
8. மரபுரிமை சொத்து காப்பு விதிகளில் தடை செய்யப்பட்ட பகுதிகள்
9. இரண்டு அல்லது அதிகமான சாலைகள் குறிப்பிட்ட இடங்களில் அனைத்து பக்கங்களில் 30 மீட்டர் நீளத்திற்கு
10. 'எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் நுழைவு வாயில் மற்றும் வெளியேரும் வாயிலிருந்து 30 மீட்டர் நீளத்திற்கு.
11. பாதுகாப்பு கோணத்தில் தடை செய்யப்பட்ட எந்த பகுதியிலும்
12. நகர விற்பனைக் குழுவின் ஒப்புதல் பெற்று நகரின் எந்த ஒரு பகுதியிலும் சாலையோர விற்பனை தடை செய்வது குறித்து உள்ளாட்சி அமைப்பு முடிவு செய்து, அத்தகைய இடங்களில் சாலையோர விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

**குறிப்பு**- கணக்கெடுப்பின்போது அறியப்பட்ட எந்த ஒரு அங்காடியையோ அல்லது இயற்கையாக அமைய பெற்ற அங்காடியையோ, விற்பனை தடை செய்யப்பட்ட பகுதியில் இணைக்கக்கூடாது.

5, சாலையோர விற்பனையாளர்களுக்கான கட்டுப்பாடு.- எந்த ஒரு விற்பனை மண்டலத்திலும், விற்பனை செய்ய சான்று பெற்ற சாலையோர விற்பனையாளர்கள்:

I. வாகன போக்குவரத்து, மிதி வண்டி மற்றும் பாதசாரி நடமாற்றத்திற்கு தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

II கதவு, நுழைவு வாயில், தீயணைப்பு கதவுகள் அல்லது அவசரகால வெளியேறும் பாதை ஆகியவற்றிற்கு மு ட்டுகொடுத்து தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது.

III குடிநீர் வழங்கல், கழிவுநீர், தொலைபேசி, மின்சாரம் அல்லது இதே மாதிரியான அமைப்புகள் போன்ற எந்தவொரு பயன்பாட்டிற்கும் தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது

IV. .சாலையில் அல்லது அதன் பக்கத்தில் உள்ள எந்த கட்டமைப்புகளுக்கோ, வழிகாட்டு பலகைகள், அறிவிப்பு பலகைகள், நகர வேலைகள் அல்லது நடவடிக்கைகளுக்கோ தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது.

V. ஆட்சேபனைக்குரிய சேவைகளையோ அல்லது பொருட்களையோ விற்பனை செய்வதோ கூடாது.

VI. 'நகர விற்பனைக் குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது.

VII. நகர விற்பனைக் குழுவால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின் சேவைகளையோ அல்லது பொருட்களை வணகம் செய்வதோ கூடாது,

VIII. உள்ளாட்சி அமைப்பால் அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர, இதர இடங்களில் திடக்கழிவுகளை கொட்டக்கூடாது.

IX. விற்பனை சான்றிதழ் காலாவதியாகிய பின்னர் பொருட்களையோ அல்லது சேவைகளையோ அல்லது விற்பனையோ செய்யக்கூடாது.

X. ஒலி பெருக்கிகள், மெகா போன்கள், ஒலி அமைப்புகள் அல்லது பிற ஒலி பெருக்கி உபகரணங்கள் மற்றும் பிரதிபலிப்பு விளம்பரங்கள் ஆகியவற்றினை பயன்படுத்தக் கூடாது.

6) சாலையோர வியாபாரிகளின் பொறுப்பு, சாலையோ வியாபாரிகள் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பணியாளரின் கடமைகள்,

I) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.

II) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மட்டும் விற்பனை செய்யப்படவேண்டும்,

III) விற்பனை செய்யும் இடத்தில் விற்பனை சான்றிதழ் காட்சிக்கு எப்பொழுதும் வைக்கப்பட வேண்டும்,

IV) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையோர விற்பனையாளர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் அல்லது அவரின் பணியாளர் விற்பனை இடத்தில் விற்பனை செய்யும்போது இருக்க வேண்டும்.

V) எப்பொழுதும் விற்பனை இடத்தினை பாதுகாப்பாகவும், நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்.

VI) உள்ளாட்சி அமைப்பின் தேவைக்கேற்ப பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

VII) உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954 அல்லது இதர விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்.

VIII) நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016யை கடைப்பிடிக்க வேண்டும்,

IX) நெகிழி கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

**X)** தகுதியுடைய அலுவலர் கோரும்போது விற்பனை சான்றிதழ் காண்பிக்க வேண்டும், மற்றும் இந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்.

## XI) அத்தியாயம்-3

## கட்டணங்கள், வரிகள் மற்றும் அபராதங்கள்

7, விற்பனை கட்டணம்,- (1) சாலையோர வியாபாரிகள் உள்ளாட்சி அமைப்பிற்கு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும்.

(2) உப விதி (1)-இன் படியான விற்பனை கட்டணம் கீழ்காணும் பட்டியலின் படியாகும்

XII) ளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்.

| வ. எண் | சாலையோர விற்பானையாளரின் வகை | பரப்பளவு | விற்பனை கட்டணம் |
|---|---|---|---|
| 1 | நிலையான விற்பானையாளர் (முழு நேரம்) | 10 சதுரஅடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் - வருடத்திற்கு ரூ.750/-க்குகுறையாமல் |
| | | 10 முதல்25 ச.அடி வரை | வழிகாட்டி மதிப்பில் 2 சதவீதம் - வருடத்திற்கு ரூ.1500/-க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வழிகாட்டி மதிப்பில் 3 சதவீதம் - வருடத்திற்கு ரூ.3500/-க்கு குறையாமல் |
| 2 | நிலையான விற்பனையாளர் (பகுதி நேரம் அல்லது நேர பகிர்வு | 10 ச.அடி வரை | வழிகாட்டி மதிப்பில் 0.5 சதவீதம் - வருடத்திற்கு ரூ.375/-க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 ச.அடி வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் - வருடத்திற்கு ரூ.750/-க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிக்கு மேல் | வழிகாட்டி மதிப்பில் 1.5 சதவீதம் - வருடத்திற்கு ரூ.1500/-க்கு குறையாமல் |
| 3 | நடமாடும் விற்பனையாளர் (மோட்டார் பொருத்தப்பட்ட வண்டியுடன்) | 10 ச.அடி வரை | வருடத்திற்கு ரூ.750/- |
| | | 10 முதல் 25 ச.அடி வரை | வருடத்திற்கு ரூ.1500/ |
| | | 25 சதுர அடிக்கு மேல் | வருடத்திற்கு ரூ.3000/ |

| | | | | |
|---|---|---|---|---|
| | 4 | நடமாடும் விற்பனையாளர் (மோட்டார் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 ச.அடி வரை | வருடத்திற்கு ரூ.375/- |
| | | | 10 முதல் 25 ச.அடி வரை | வருடத்திற்கு ரூ.750/ |
| | | | 25 சதுர அடிக்கு மேல் | வருடத்திற்கு ரூ.1500/ |
| | 5 | நடமாடும் விற்பனையாளர் தலைசுமை | ------ | வருடத்திற்கு ரூ.250/- |

(3) மூன்று வருடங்களுக்கு ஒரு முறை விற்பனை கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு , உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

8. **பராமரிப்பு கட்டணம்**

i. சாலையோர விற்பனையாளரின் வகை மற்றும் அங்காடியின்தகுதியின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்பால் செய்யப்பட்டுள்ள குடிமை நலன்கள் மற்றும் வசதிகளுக்காக மாதாந்திர பராமரிப்பு கட்டணம் செலுத்தப்பட வேண்டும். சாலையோர விற்பனையாளர்கள் மற்றும் அங்காடி வகைகள் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்படும்.

2. உப விதி (1)யில் குறிப்பிடப்பட்டுள்ள பராமரிப்பு கட்டணம் மாதத்திற்கு /அரையாண்டிற்கு / ஆண்டிற்கு ரூ.( * ) /-க்கு குறையாமலும், ரூ.( * ) /-க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

3. பராமரிப்பு கட்டணம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் உயர்த்தப்பட வேண்டும். (*)சதவீதம் ( (*) மாநகராட்சி / நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளின்படி முடிவு செய்யப்பட வேண்டும்.)

9. **அபராதம் விதித்தல்,- எந்தவொரு சாலையோர விற்பனையாளரும்,**

i. விற்பனை சான்றிதழ்படி, மாற்று இடத்திற்கு செல்ல அல்லது காலி செய்ய தவறும்பட்சத்தில், அல்லது

ii. விற்பனை சான்றிதழ் இல்லாமல் விற்பனை செயலில் ஈடுபட்டாலோ, விற்பனை சான்று மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறை சட்ட பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் திட்டத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும்போது, மாதாந்திர கட்டணத்தில் (மூன்று) மடங்காக அபராதம் செலுத்தப்பட வேண்டும்.

iii. விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சாலையோர விற்பனைபாளர் மூன்று முறைகள் மீறினால் அவரின் விற்பனை சான்று இடைநீக்கம் செய்யப்படும். நான்காவது முறையாக விதிமுறைகளை மீறினால் அவரின் விற்பனை சான்று ரத்து செய்யப்படும்.

# அத்தியாயம்-4

## பல்வகை

10. விற்பனை மண்டலத்தில் போக்குவரத்தினை ஒழுங்குமுறை படுத்துதல்.-

(1) நகர விற்பனை குழுவால் அறிவிக்கப்பட்ட விற்பனை மண்டலங்களில், ஒரு வழி வாகன போக்குவரத்து, வேக கட்டுப்பாடு, வாகன நிறுத்தம், கனரக வாகனங்கள் இயக்கம் மற்றும் இது குறித்த இதர பொருள்கள் குறித்து போக்குவரத்து காவல்துறையால் முடிவு செய்யப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் விற்பனை மண்டலம் அமைப்பது குறித்து போக்குவரத்து காவல்துறையால் அங்கீகரிக்கப்படவில்லையெனில், அந்த விற்பனை மண்டலத்தினை மாற்றியமைப்பது குறித்தோ அல்லது விற்பனை மண்டலத்தினை ரத்து செய்வது குறித்தோ நகர விற்பனைக் குழு பரிசீலனை செய்ய வேண்டும்.

(2) விற்பனை மண்டலத்தில், விற்பனை பகுதி, நடைபாதை மற்றும் வண்டி பாதை ஆகியவற்றினை உள்ளாட்சி அமைப்பால் தெளிவாக தெளிவுபடுத்த வேண்டும்.

11. விற்பனை மண்டலத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தினை ஒழுங்குபடுத்துதல். - எந்த ஒரு விற்பனையாளரும், தயார் செய்யப்பட்ட அல்லது அந்த இடத்தில் தயாரித்து விற்பனை செய்யும் உணவு பொருட்கள் குறித்து உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில், மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற அலுவலரால் தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் மற்றும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவால் அந்த சாலையோர வியாபாரியின் விற்பனை சான்றினை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்.

12. விற்பனை மண்டலங்களில் குடிமை சேவைகளை ஒழுங்குப்படுத்துதல்,- (1) விற்பனை மண்டலங்களில், பொது கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகளை உள்ளாட்சி அமைப்பால் ஏற்படுத்த வேண்டும்.

i. உள்ளாட்சி அமைப்பால் திடக்கழிவுகளை சரியான முறையில் சேகரிக்கப்பட வேண்டும்.

ii. சாலையோர வியாபாரிகள் தனிநபர் தேவைக்கு மின் செரிவூட்டும் சாதனம் (rechargeable lamps) அல்லது சுயமாக மின் உற்பத்தி செய்யும் சாதனங்கள் உபயோக படுத்தல் வேண்டும்.

iii. விற்பனை மண்டலங்களில் தனி நபர் மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கக் கூடாது.

iv. மின்சார கம்பங்களிலிருந்து முறையற்ற மின் உபயோகத்தை தடுக்கப்படும்.

மேற்கண்ட சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள்(By-Law), 2018-மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்பட்டுள்ளது மற்றும் பொது மக்களின் ஆட்சேபனை மற்றும் கருத்துரு பெறுவதற்கு ஏதேனும் தினசரி நாளிழில் பிரசுரம் செய்யவும் பின்னர் அரசிதழில் வெளியிடவும் ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக்குறிப்பு.** | மன்றம் அனுமதிக்கலாம். |

தீர்மான எண்695 அனுமதிக்கப்பட்டது

14. கம்பம் நகராட்சி குத்தகை இனங்கள் பலன் தரும் மரங்கள்,புதிய பேருந்து நிலையத்தில் 0 மற்றும் முறுக்கு விற்கும் உரிமம்,கட்டண கழிப்பறை tNலிக்கும் உரிமம்,பொருட்கள் பாதுகாப்பு அறைக்கட்டணம், கடை எண்2 மற்றும்5,வாரச்சந்தை மற்றும் தினசரி சந்தை,வாரச்சந்தை கடைஎண் 2,13 ஆகிய குத்தகை இனங்களுக்கு 07.08.2025 அன்று பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் | மாத வடகைத் தொகை % | இனம் |
|---|---|---|---|
| 1 | அ.சதாம் உசேன் கே.வி,ஆர் கோவில் தெரு.கம்பம் | ரூ.4200/- | வாரச்சந்தையில் உள்ள கடை எண் 13 |

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2) தற்போது மேற்கண்ட இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதலாக குத்தகை தொகையினை கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். |

**தீர்மான எண்696 அனுமதிக்கப்பட்டது**

15 கம்பம் நகராட்சி குத்தகை இனங்கள் நகராட்சிக்கு சொந்தமான வார்டு 25 காந்திஜி தெரு,உழவர் சந்தை அருகில் உள்ள புதிய வணிக வளாக 12 கடைகள்,உணவகம், வார்டு 03 எல் எப் ரோடு (வாரச்சந்தை அருகில்) புதிய ஆம்னி பேருந்து நிலையத்தில் உள்ள 13 கடைகள் நகராட்சிக்கு சொந்தமான பலன் தரும் மரங்கள், புதிய பேருந்து நிலையத்தில் தட்டில் வைத்து பூ மற்றும் முறுக்கு விற்கும் உரிமம் , புதி பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறை வசூலிக்கும் உரிமம், கம்பம் வாரச்சந்தை மற்றும் வடக்கு தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். வாரச்சந்தை கடை எண்**2**, புதிய பேருந்து நிலையத்தில் உள்ள பொருட்கள் பாதுகாப்பு அறைக்கட்டணம் வசூலிக்கும் உரிமம். புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண்.1 மற்றும் 15 பேருந்து நுழைவுக்கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஆகிய குத்தகை இனங்களுக்கு 20.11.2025 அன்று பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது..

| வ.எண் | பெயர் | மாத வடகைத் தொகை % | இனம் |
|---|---|---|---|
| 1 | பி.சிபி<br>3/2/107,பாறை மெட்டு தெரு<br>உத்தமபாளையம். | % 4200 | வாரச்சந்தை கட்டப்பட்டுள்ள கடை எண் 02(ஒப்பந்தப்புள்ளி ஒன்று மட்டும் வரப்பட்டது)16வது முறை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டது |
| 2 | பி.கார்த்திக்<br>கோம்பை ரோடு<br>கம்பம். | % 5300 | புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண்01 |
| | டி.சிவ இளங்கோ<br>6/5,விவேகானந்தர் தெரு,<br>கம்பம். | % 5500 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 3 | பே.க.இளங்கோ<br><br>வார்டு8,பழைய கள்ளர் பள்ளி தெரு,கே கே பட்டி | ₹5400 | புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண்15(ஒப்பந்தப்புள்ளி ஒன்று மட்டும் வரப்பட்டது) 16வது முறை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டது | |

| | | |
|---|---|---|
| | அலுவலகக் குறிப்பு | 1)வாரச்சந்தை கடை எண்2 மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண்15 16வது முறை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டுள்ள நிலையில் .தற்போது வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>2)வரிசை எண் 2ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதலாக வாடகை கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். |
| | தீர்மான எண்697 அனுமதிக்கப்பட்டது | |
| 16 | அரசாணை எண் 119 மற்றும் 120 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்) துறை நாள். 26.06.2025ன்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம் வழங்கும் வகையில் கம்பம் நகராட்சி அலுவலகத்தில் 26.11.2025 அன்று காலை 11.00 மணிக்கு திரு.பா.லோகநாதன் என்பவர் மாற்றுத்திறனாளி உறுப்பினராக பதவி ஏற்பு உறுதி மொழி ஆணையாளர் முன்னிலையில் நடைபெற்றது. நகர்மன்றத் தலைவர் கலந்து கொண்டு பதவிப் பிரமாணம் செய்து சிறப்பித்தது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | |
| | அலுவலகக் குறிப்பு | மன்றம் அனுமதிக்கலாம் |
| | தீர்மான எண் 698 அனுமதிக்கப்பட்டது | |

ஒப்பம்/-திருமதி நெ.வனிதாநெப்போலியன்,
நகர்மன்றத்தலைவர்,
கம்பம் நகர் மன்றம்.

இடம் – கம்பம்நகராட்சி

நாள்- 28.11.2025

**-/உண்மை நகல்/**

**ஆணையர்,**

**கம்பம் நகராட்சி.**